'போக்சோ' வழக்குகளைக் கையாளுவது தொடர்பாக முதலமைச்சர் அவர்கள், ஓர் உயர்நிலைக் கூட்டத்தை நடத்தி வழங்கிய ஆலோசனைகளின் படியும், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை சார்பில் தலைமைச் செயலகத்தில் நேற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனை நடத்தினார். சமூகநலத்துறை அமைச்சர், காவல்துறைத் தலைவர், உள்துறை, சுகாதாரத்துறை, பள்ளிக்கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர்கள், மண்டல காவல்துறை ஐ.ஜி.க்கள் – அதிகாரிகள், பங்கேற்ற இக்கூட்டத்தில், 'போக்சோ' வழக்குகளில் புகார் முதல் தண்டனை பெற்றுத்தருவது வரை இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து கலந்துரையாடினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் தொடர் பொதுக்கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அர.சக்கரபாணி அறிக்கை

திண்டுக்கல், ஜூன் 14-

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அர.சக்கரபாணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழக துணைப் பொதுச் செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை .ஐ.பெரியசாமி ஆலோசனையின்படியும் தி.மு.கழக இளைஞர் அணி சார்பாக திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைப் பிரச்சாரக் கூட்டங்கள் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் கீழ்கண்டவாறு நடைபெறவுள்ளது.

16.06.2023-கீரனூர் பேரூர்-திரு.பசும்பொன் ரவிச்சந்திரன்

17.06.2023-ஒட்டன்சத்திரம் தெற்கு ஒன்றியம்-பசும்பொன் ரவிச்சந்திரன்

18.06.2023-ஒட்டன்சத்திரம் நகரம்தி போடி காமராஜ்

19.06.2023-(4 ஊராட்சிகள்)-தூத்துக்குடி சரத்பாலா

20.06.2023-தொப்பம்பட்டி மேற்கு- தூத்துக்குடி சரத்பாலா

21.06.2023-தொப்பம்பட்டி கிழக்கு-தூத்துக்குடி சரத்பாலா

22.06.2023 -ஒட்டன்சத்திரம் வடக்கு-போடி காமராஜ்

வேடசந்தூர்

14.06.2023-வேடசந்தூர் பேரூர்-திருமதி.ரம்ஜான் பேகம்

15.06.2023-குஜிலியம்பாறை ஒன்றியம்-தூத்துக்குடி சரத்பாலா

16.06.2023-அய்யலூர் பேரூர்-கந்திலி கரிகாலன்

17.06.2023-பாளையம் பேரூர்-கந்திலி கரிகாலன்

18.06.2023-எரியோடு பேரூர்-பசும்பொன் ரவிச்சந்திரன்

19.06.2023-வேடசந்தூர் தெற்கு ஒன்றியம்-போடி காமராஜ்

20.06.2023-வேடசந்தூர் வடக்கு ஒன்றியம்-கந்திலி கரிகாலன்

21.06.2023-வடமதுரை பேரூர்-போடி காமராஜ்

22.06.2023-வடமதுரை ஒன்றியம்-கந்திலி கரிகாலன்

நத்தம்

14.06.2023-நத்தம் வடக்கு ஒன்றியம்- தூத்துக்குடி சரத்பாலா

16.06.2023-திண்டுக்கல் தெற்கு ஒன்றியம்-ஈரோடு இளையகோபால்

18.06.2023-நத்தம் பேரூர்-பவானி கண்ணன்

19.06.2023-நத்தம் தெற்கு ஒன்றியம்-பசும்பொன் ரவிச்சந்திரன்

20.06.2023-சாணார்பட்டி தெற்கு ஒன்றியம்-போடி காமராஜ்

21.06.2023 -சாணார்பட்டி வடக்கு ஒன்றியம்-கந்திலி கரிகாலன்

அதுசமயம் சம்பந்தப்பட்ட ஒன்றிய,நகர, பேரூர் செயலாளர்கள் இக்கூட்டங்களை சிறப்பாக ஏற்பாடு செய்து கழகத்தின் அனைத்து நிர்வாகிகள், சார்பு அணியினர், முன்னாள் / இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொள்ளும் வகையில் சிறப்பாக ஏற்பாடு செய்து கூட்டங்களை நடத்திடுமாறும், அனைவரும் கலந்து கொண்டு கூட்டங்களை சிறப்பிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நான்காம் ஆண்டு

நினைவு அஞ்சலி

தோற்றம் 10.09.1937

மறைவு 14.06.2019

முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்

முன்னாள் பாராளுமன்ற மேலவை உறுப்பினர்

எஸ்.சிவசுப்ரமணியன் MA.,BL.,

வருத்தத்துடன்

அரியலூர் மாவட்ட தி.மு.க

எதிர்க்கட்சியினரை மிரட்டுவதற்காக சோதனை நடத்துவது போன்ற போக்கை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்!

மனித உரிமையை மீறும் வகையில் - அமைச்சர் செந்தில் பாலாஜி வீட்டில் சோதனை!

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்!

சென்னை, ஜூன்.14-

மனித உரிமையை மீறும் வகையில் அமைச்சர் செந்தில் பாலாஜி வீட்டில் சோதனை நடத்தப்படுகிறது என, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்தார்.

சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள அமைச்சர் செந்தில் பாலாஜியின் வீட்டில் நேற்று காலையில் இருந்து அமலாக்கத்துறையினர் சோதனையில் ஈடுபட்டனர். இந்த நிலையில் அமைச்சரை சந்தித்து பேச தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் பரந்தாமன் எம்.எல்.ஏ ஆகியோர் மாலை 3.30 மணியளவில் வருகை தந்தனர். ஆனால் அவர்களை வீட்டின் உள்ளே அனுமதிக்க அமலாக்கத்துறையினர் மறுத்ததால், அமைச்சரை வெளியே அழைத்து வந்து பேச வைக்குமாறு கேட்டனர். உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று விட்டு வருவதாக சென்ற அமலாக்கத்துறையினர், 15 மணிநேரத்திற்கு மேலாகியும் திரும்பி வரவில்லை.

எனவே செய்தியாளர்களை சந்தித்த அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி குறிப்பிட்டதாவது :-

"அமித் ஷா தமிழ்நாட்டிற்கு வந்தபோது, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு என்ன செய்தது என பட்டியலிட தயாரா என தமிழ்நாடு முதலமைச்சர் கேள்வி எழுப்பி இருந்தார். அதற்கு உரிய பதில் சொல்ல முடியவில்லை. அதேபோல அண்ணாமலையின் பேச்சால் அ.தி.மு.க. - பா.ஜ.க. இடையே மோதல் உருவாகி உள்ளது. இதையெல்லாம் திசை திருப்பும் வகையில் தி.மு.க. ஆட்சியில் ஊழல் நடைபெறுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தவே இந்த சோதனை நடைபெறுகிறது. முந்தைய ஆட்சியில் நடந்த ஊழலை தி.மு.க. ஆட்சியில் நடந்த ஊழலைப் போன்று தோற்றத்தை ஏற்படுத்த திட்டமிட்டு இந்தச் சோதனை நடக்கிறது.

சோதனை காலையிலேயே தொடங்கிய நிலையில் அப்போதே உள்ளே சென்ற அமைச்சர் இப்போது என்ன நிலையில் இருக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ளவே மனிதாபிமான அடிப்படையில் அவரைச் சந்திக்க கேட்டோம். ஆனால் மனித உரிமையை மீறும் வகையில் இந்தச் சோதனை நடைபெறுகிறது. அமைச்சர் செந்தில் பாலாஜியை சந்திக்க வழக்கறிஞர்களான எங்களுக்கே அனுமதி வழங்கப்படவில்லை.

செந்தில் பாலாஜிக்கு என்ன ஆனது என அறிந்து கொள்ளும் உரிமை எங்களுக்கு உள்ளது. அதிகாரிகளிடம் பணிவோடு கேட்டபிறகும் அமைச்சரைச் சந்திக்க எங்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

தலைமைச் செயலாளரிடம் அனுமதி பெற்றுத்தான், தலைமைச் செயலகத்தில் சோதனை நடத்த வேண்டும். தலைமைச் செயலாளரிடம் அனுமதி பெற வேண்டும் என்ற விதி மீறப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் டி.கே. சிவக்குமாரை டார்கெட் செய்து இப்படித்தான் அமலாக்கத்துறை தொடர்ந்து ரெய்டு நடத்தினர். ஆனால் எந்த முறைகேட்டையும் நிரூபிக்கவில்லை. அங்கு தேர்தலிலும் பா.ஜ.க. படுதோல்வி அடைந்தது. அதே நிலைதான் இங்கும் உருவாகும். இன்னும் 10 அமாவாசை தான் பா.ஜ.க. ஆட்சிக்கு இருக்கிறது. அதற்குள் இப்படியெல்லாம் சோதனைகள் நடத்தி களங்கம் கற்பிக்க நினைக்கிறார்கள். ஆனால் அமலாக்கத்துறை இதுவரை எந்த வழக்கிலும் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுத்தது இல்லை. இவையெல்லாம் மிரட்டல்களுக்கே. இந்தப் போக்கை பா.ஜ.க. நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற சோதனைகளால் ஒரு மனிதரின் புகழ் , பெருமையை ஏதும் செய்ய முடியாது.

1976 முதல் இதுபோன்ற பல சோதனையை தி.மு.கவினர் பார்த்துவிட்டோம். இதுவரை அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கில் 100ல் 0.5 என்ற அளவில் கூட சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் தலைமைச் செயலகத்தில் சோதனை நடத்தப்பட்டபோது எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் வாய் திறக்கவில்லை. ஆனால் அப்போதும் எங்கள் தலைவர் மு.க. ஸ்டாலின்தான் அதைக் கண்டித்தார்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி குறிப்பிட்டார்.

சைதாப்பேட்டை தொகுதி – கோட்டூரில் உள்ள

மாநகராட்சி விளையாட்டுத் திடலை ரூ.5 கோடியில் மேம்படுத்தல்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு கள ஆய்வு!

சென்னை, ஜூன் 14 -

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023 24 ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று (13.6.2023) சென்னை, சைதாப் பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூரில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : -

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு 50 அறிவிப்புகளை அறிவித்தார்கள். அந்த 50 அறிவிப்புகளில் ஒன்றான சைதாப் பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூரில் உள்ள மாநகராட்சி விளையாட்டுத் திடலை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது தொடர்பாக இன்று கள ஆய்வு மேற்கொண்டோம்.

இன்றோடு (13.06.2023) 32 இடங்களில் கள ஆய்வை தினந்தோறும் மேற்கொள்ளப்பட்டு, அறிவித்த அனைத்து திட்டங்களையும் இந்த ஆண்டு பணிகளை செய்வதற்குரிய வேகத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஈடுபட்டிருக்கிறது. அந்த வகையில் இன்று ஆய்வு மேற்கொண்ட சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட பணியாக கோட்டூர் விளையாட்டு திடலை மேம்படுத்துவது, இந்த கோட்டூர் விளையாட்டு திடல் பொறுத்தவரை பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி, இன்றைக்கு ரயில்வே, ஐசிஎப் போன்ற பெரிய நிறுவனங்களில் வேலைவாய்ப்பையும் பெற்றுத்தந்திருக்கின்ற மைதானமாக அமைந்திருக்கிறது.

எனவே, இந்த மைதானத்தை மேம்படுத்தித் தர வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்தது. இதை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவது என்று சட்டமன்றத்தில் நிதி நிலை அறிக்கையில் அமைச்சர் அவர்கள் அறிவித்தார். அறிவித்ததற்கிணங்க, அமைச்சர் அவர்களும், துறையின் உயர் அலுவலர்களும் பங்கேற்று ஆய்வு மேற்கொண்டிருக்கிறார்கள். ஒரு வரைபடமும் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. 1.16 ஏக்கர் நில பரப்பிலான இந்த விளையாட்டு மைதானத்தில் சுற்றிலும் நடைபயிற்சிக்கான பாதை அமைப்பது, சிறுவர்களுக்கான விளையாட்டு திடல் ஏற்படுத்துவது, மாலை நேரங்களில் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடத்துவதற்குரிய கேலரி ஒன்றை உருவாக்குவது, அதேபோல் ஏற்கனவே இம்மைதானத்தில் இருக்கின்ற உடற்பயிற்சி கூடத்தை நவீனமயமாக்குவது போன்ற பல்வேறு பணிகளைச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், உடனடியாக இதற்கான திட்ட மதிப்பீடுகளை தயாரிக்க சொல்லி ஒரு மாத காலத்திற்குள் அந்த ஒப்பந்தங்கள் விட அறிவுறுத்தியிருக்கிறார். நிச்சயம் ஒரு மாதத்தில் இந்த பணி மேற்கொள்ளப்படும் போது, அறிவித்த ஓராண்டிற்குள்ளாகவே இப்பணி செய்து முடிக்கப்படும் என்கின்ற வகையில் வேகத்தோடு இந்த பணியினை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். சைதை தொகுதி மக்களின் சார்பில் முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் அமைச்சர் அவர்களுக்கும் நாங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, முதன்மை செயல் அலுவலர் திருமதி. கவிதா ராமு, பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் (கல்வி) திருமதி. ஷரண்யா அறி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி. அமித், அடையாறு மண்டலக் குழுத்தலைவர் இரா.துரைராஜ் சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் என்.எஸ்.பெரியசாமி, எஸ்.ருத்ரமூர்த்தி, மாநகராட்சி மற்றும் துறை அலுவலர்கள், க.மணி, சண்முகம் உள்ளிட்ட கழகத்தினர் உடனிருந்தனர்.

வை.கௌதமன் தலைமை! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ. முன்னிலை!

பெரம்பூரில் மாபெரும் பொதுக்கூட்டம்: இரா.இராஜீவ்காந்தி சிறப்புரை!

தா.இளைய அருணா - கலாநிதி வீராசாமி எம்.பி. - ஐட்ரீம் மூர்த்தி - ஜோயல் பங்கேற்பு!

சென்னை, ஜூன் 14 -

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நல உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் இன்று (14.6.2023 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு 44 வது வட்டம் பழனி ஆண்டவர் கோயில் தெருவில் நடைபெறுகிறது. கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வை.கௌதமன் தலைமை வகிக்கிறார்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.,ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த.ஆறுமுகம், கே.மதன், இரா.பொன் இளவரசன், சி.சுரேஷ், எச்.ராஜ்குமார், கே.ராஜசேகர், நா.பாஸ்கர், நி.எழிலரசன், எச்.யஸ்வின் குமார், உமா ஜான், எம்.லோகநாதன், வி.ஏழுமலை, வி.மணி, பி.வினோத், ஜெ.கோமதி, நா.தட்சிணாமூர்த்தி, கோபொன்னிவளவன், ப.பிரதீப், பூ.வேல்முருகன், பி.கலைஞானம், புல்லட் பி.கிருஷ்ணன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ்காந்தி சிறப்புரையாற்றுகிறார். மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல், ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், ந.சர்பஜெயதாஸ், ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி, சி.ஆனந்தி, க.சர்மிளாகாந்தி, ஏ.தமிழ்ச்செல்வன், ப.மதிவாணன், டி.கமலக்கண்ணன் க.அமுல் மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

டி.சாம்பிளசன், க.ஜெகதீஷ், ம.பிரசாந்த், ப.கோகுல், ஐ. சதாம், பி.சங்கர், கே.ரவிசந்திரன், ப.முகேஷ், ரா.சதீஷ்குமார், பி.கார்த்திக், எஸ்.பாலசுப்பிரமணி, எச்.சதீஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நெமிலிச்சேரி ஊராட்சி சோழன் நகர் பகுதியில் உள்ள 5 தெருக்களுக்கான சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைப்பதற்கான திட்ட மதிப்பீடுகள் அளிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிலையில் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கப்பட உள்ள பகுதிகளை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ ஆய்வு மேற்கொண்டு பணிகள் துவங்குவது தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டறிந்து சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகளை விரைவில் முடிக்க வேண்டும் எனவும் சாலைகளை தரமாக அமைக்க வேண்டும் என வலியுறுத்தினார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் ப.நரேஷ் குமார், பொன்.விமல் ஒன்றிய செயலாளர்கள் ப.ச.கமலேஷ், சே.பிரேம் ஆனந்த், ஒன்றிய குழு துணைத் தலைவர் பரமேஸ்வரி கந்தன், ஊராட்சி மன்ற தலைவர் கு.தமிழ்செல்வி,ஒன்றிய கவுன்சிலர் நெமிலிச்சேரி சுரேஷ்குமார், துணை தலைவர் வாசுகி எட்வின் நிர்வாகிகள் நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், கட்டத் தொட்டி குணாசேகரன், பா.கந்தன், இ.வி.பி.பிரதீப் உள்பட பலர் உடனிருந்தனர்.